11. உதவிப் பணிப்பாளர் - ஏற்றுமதிப் பயிர்கள்
12. முகாமையாளர் - தேயிலை சிறுதோட்ட சொந்தக்காரர் அதிகாரசபை

13. பிரதிப் பணிப்பாளர் - இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்
14. பிரதேச முகாமையாளர் - தெங்குப் பயிர்ச்செய்கை சபை
15. உதவிப் பணிப்பாளர் - மத்திய சுற்றாடல் அதிகாரசபை

தேவை ஏற்படின் அரச அதிபரினால் ஏனைய திணைக்களங்கள் / நிறுவனங் களிலிருந்து மேலதிமாக அங்கத்தவர்களை நியமிக்கலாம்.

## 5.4. பிரதேச மட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழு

அந்தந்த மாவட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டமிடற் குழுவின் வழிகாட்டலில் பிரதேச மட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழு செயற்படுகிறது. காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் நடவடிக்கைகள் பிரதேச காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழுவின் ஒருங்கிணைப்புடன் மேற்கொள்ளப்படும். பிரதேச காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழுவின் தலைவராக பிரதேச செயலாளரும், செயலாளராகவும், குழுவின் ஒருங்கிணைப்பாளராகவும் காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தரும் செயலாற்றுவார்கள்.

### பிரதேசமட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழுவின் செயற்பங்கு

1. பிரதேச மட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டமிடலுக்கு உதவுதல் மற்றும் அமுலாக்கல் நடவடிக்கைகள்
2. காணிப் பயன்படுத்தலில் முன்னுரிமையான காணிகளை இனங்காணுதல்.
3. காணிப் பயன்பாடு தொடர்பான பிரச்சனைகளை இனங்காணுதல் அவற்றிற் கான பரிந்துரைகளைச் செய்தல் தேவையாயின் மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழுவிற்கு முன்வைத்தல்.
4. காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் பரிந்துரைகளின் அடிப்படையில் குறுகிய கால மற்றும் நீண்டகால செயற்திட்டங்களை தயாரித்தல். இத்திட்டம் பிரதேச மட்ட வருடாந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும்.
5. தேவையான போது மாவட்ட மற்றும் தேசிய மட்ட குழுவிற்கு பரிந்துரைகளை வழங்குதல்
6. காணி பராதீனப்படுத்தல் மற்றும் காணி ஒதுக்கீடு செய்தல், காணிக் கச்சேரிகளை நடாத்தல் ஆகியவற்றிற்கு பிரதேச மட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் குழுவினூடாக அவசியமான பரிந்துரைகளை வழங்குதல்
7. அரச செயற்பாடுகளுக்காக காணி கையகப்படுத்தலுக்கு குழுவினூடாக பரிந்துரைகளை வழங்குதல்
8. கிராம மட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டமிடற் குழுவிற்கு வழிகாட்டல்
9. எதிர்கால அபிவிருத்திக்காக பிரதேசத்திலுள்ள காணிகளை இனங்காணுதல்.
10. பல்வேறு பாவனைகளுக்கும் காணிகளை ஒதுக்கீடு செய்யும் போது காணிப் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் பரிந்துரைகளை வழங்குதல்

11. பிரதேச மட்டத்தில் காணிப் பயன்பாடுபற்றிய தரவுகளை உருவாக்கல், அதனை மாவட்ட தரவு அடிப்படையுடன் இணைத்தல்

### பிரதேச மட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டமிடற் குழுவின் அமைப்பு

1. பிரதேச செயலாளர் - தலைவர்
2. காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர் - செயலாளர்
3. காணி உத்தியோகத்தர்/ குடியேற்றத்திட்ட உத்தியோகத்தர்
4. விவசாயப் போதனாசிரியர்
5. பெரும்பாக உத்தியோகத்தர் - கமத்தொழில் சேவைகள்
6. வன உத்தியோகத்தர்
7. உதவி நில அளவை கண்காணிப்பாளர்
8. விரிவாக்க உத்தியோகத்தர் (தேயிலை.்.தென்னை.்.இறப்பர்)
9. கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர்
10. சுற்றாடல் உத்தியோகத்தர்
11. விவசாயிகள் அமைப்பின் பிரதிநிதி.
12. பெருந்தோட்டத் துறையின் பிரதிநிதி
13. சம்பந்தப்பட்ட அரச முகவர் அமைப்புகளின் பிரதிநிதி.

2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயற்திட்டத்தில் 330 குழு கூட்டங்கள் (மாவட்ட / பிரதேச) நடாத்த இலக்காக கொள்ளப்பட்டதில் 330 கூட்டங்களும் நடாத்தப்பட்டன. இதனைவிட மேலதிக ஒதுக்கீட்டின் கீழ் கூடுதலாக, 30 கூட்டங்கள் நடாத்தப்பட்டன. அதன்படி மொத்தமாக 360 குழுக் கூட்டங்கள் நடாத்தப் பட்டன. இது சம்பந்தமாக மொத்த ஒதுக்கீடு ரூபா 0.74 மில்லியன் மற்றும் நிதி முன்னேற்றம் 97.53% ஆகும்

### 2018 Mk; Mz;by; eilngw;w gpuNjr fhzpg; gad;ghl;Lf;; FOf; $l;lq;fs;

படம். 05

யாழ்ப்பாண மாவட்டம் - வேலனை பிரதேச செயலக பிரிவு - பிரதேச காணிப் பயன்பாட்டுக் குழுக் கூட்டம் நடைபெற்ற போது



படம். 06

யாழ்ப்பாண மாவட்டம் - பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவு - பிரதேச காணிப் பயன்பாட்டுக் குழுக் கூட்டம் நடைபெற்ற போது



**படம். 07**
**கண்டி மாவட்டம் - பததும்பர பிரதேச செயலக பிரிவு - பிரதேச காணிப் பயன்பாட்டுக் குழுக் கூட்டம் நடைபெற்ற போது**



## 5.5. விழிப்புணர்வு உருவாக்கம், பயிலரங்கு மற்றும் வளங்குன்றாத காணிப் பயன்பாட்டிற்கான கலந்துரையாடல்கள்

இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம், விஞ்ஞான முறையியல் அடிப்படையிலான வளங்குன்றாத காணிப் பயன்பாட்டினைப் பற்றி பாடசாலை மாணவர்கள் மற்றும் சமூகத்திற்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதலாகும். இந்த திட்டத்திற்கு இலக்கு வைக்கப்பட்டற்கு குழு உயர்தர மாணவர்கள், கிராமப்புற சமூகம் மற்றும் பிரதேச மட்ட உத்தியோகத்தர்கள் ஆகும். மாணவர்கள் விரைவாக செய்திகளை பெரியவர்களிடம் தெரிவிக்க முடியும். இது தற்போது ஒரு மதிப்பை வழங்குகிறது மற்றும் இது எதிர்கால முதலீடாக இருக்கும். வளங்குன்றாத காணிப் பயன்பாட்டு திட்டம் பற்றி உயர்தர மாணவர்களுக்குத் தெரிந்து கொள்ள இது சரியான நேரம்இ ஏனெனில் இது உயர் தர புவியியல் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. மக்களுக்கு அறிவளிப்பதன் மூலம் தவறான பயன்பாட்டை குறைக்கவும், பயன்படுத்தப்படாத நிலங்கள் பயன்படுத்துவதை ஊக்குவிக்கவும், குறைந்த பயன்பாட்டிலுள்ள நிலங்களில் பயன்பாட்டை மேம்படுத்தவும், மண், நீர் மற்றும் காடுகளை பாதுகாப்பதற்கான அணுகுமுறைகளை மேம்படுத்தவும் முடியும். இந்த விழிப்புணர்வு ஏற்படுத்தலின் குறிக்கோள் நில வளத்தை வளங்குன்றாமல் நிலைநிறுத்துவதாகும்.

திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்படும் மற்ற திட்டங்களும் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தியுள்ளன. எனினும், 25 மாவட்டங்களை உள்ளடக்கிய 200 நேரடி விழிப்புணர்வு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

2018 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மொத்த ஒதுக்கீடு ரூ.0.6மில்லியன் மற்றும் 2018ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் தேதியில் நிதி முன்னேற்றம் 100% ஆகும்.

படம் இல.8

கொழும்பு மாவட்டம் - தெகிவளை பிரதேச செயலாளர் பிரிவில் சுபோதா வித்தியாலயம் -பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வுக் கூட்டம்



படம் இல.9

மாத்தளை மாவட்டம் - உக்குவளை பிரதேச செயலாளர் பிரிவில் மக்கள் / அலுவலகர்களுக்கு விழிப்புணர்வுக் கூட்டம்



படம் இல.10
இரத்தினபுரி மாவட்டம் - அலபாத்த, பிரதேச செயலாளர் பிரிவு பரன்கொட மகா வித்தியாலயம் - பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வுக் கூட்டம்



படம் இல.11

இரத்தினபுரி மாவட்டம் - கிரியல்ல பிரதேச செயலாளர் பிரிவில் மக்களுக்கு விழிப்புணர்வுக் கூட்டம்



## 5.6. நிலத்தை வளங்குன்றாத வகையில் பயன்படுத்துவதற்காக கிராம மட்டத்திலான காணிப் பயன்பாட்டுத் திட்டம்

இலங்கையில் பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழுள்ள கிராமங்கள் மற்றும் பண்டைய குளங்களை அண்டிய கிராமங்களைத் தவிர ஏனைய கிராமங்கள் திட்டமிட்டு உருவாக்கப்படவில்லை. இக்கிராமங்களின் பொதுவான அம்சம் அதிகரித்து வரும் மக்களின் தேவையை பூர்த்தி செய்ய கிராமங்களிலுள்ள நிலங்களை சரியான முறையில் பயன்படுத்தாததால் பல்வேறுபட்ட பிரச்சனைகள் தோன்றியுள்ளன. விவசாய நிலங்களில் உற்பத்தித்திறன் குறைதல், நீர் ஆதாரங்கள் அழிதல், கிராமங்களிலுள்ள வனங்கள் குறைதல், மேய்ச்சல் தரைகள் இல்லாமை, வீடு கட்ட நிலம் இல்லாமை, நிலச்சரிவுகள், வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை அனர்த்தங்கள் அடிக்கடி நிகழும் நிகழ்வு ஆகியன கிராமங்களில் நிலத்துடன் தொடர்புடைய பிரச்சனைகளாகும். தெரிவுசெய்யப்பட்ட கிராமங்களுக்கு கிராமத்திலுள்ள மக்கள் மற்றும் ஏனைய பங்களிப்பாளர்களின் பங்குபற்றலுடன் தற்போதய காணிப் பயன்பாடு மற்றும் பௌதீக நிலைமை ஆகியவற்றை கருத்திற்கொண்டு கிராம மட்டத்திலான காணிப் பயன்பாட்டுத் திட்டம் தயாரித்தல் சரியான நேரத்தில் தேவைப்படும் நடவடிக்கையாகும். திட்டத்தின் பரிந்துரைகளை பங்களிப்பாளர்களூடாக நடைமுறைப் படுத்துவதனூடாக பெரும்பாலான நிலத்துடன் தொடர்புடைய பிரச்சனைகளைக் குறைக்கலாம்.

காணிப் பயன்பாட்டுத் திட்டம் முக்கியமாக கிராமத்தின் தற்போதய காணிப் பயன்பாடு, காணிப் பயன்பாட்டுப் பிரச்சினைகள், பரிந்துரைகள் மற்றும் ஆலோசனைகளை

உள்ளடக்குகிறது. காணிப் பயன்பாட்டுத் திட்டம் பின்வரும் முக்கிய பகுதிகளுடன் வரைபடமாக முன்வைக்கப்படும்.

- தற்போது சட்டரீதியாக பாதுகாக்கப்பட்ட அல்லது பேணப்பட்ட பகுதிகள்.
- பாதுகாக்க மற்றும் பேணுவதற்கு பரிந்துரைக்கப்பட்ட பகுதிகள்
- மேம்படுத்தல் / புனரமைக்க தேவைப்படும் விவசாய நிலங்கள்.
- எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் பகுதிகள்.

2018 ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களுக்கான 200 கிராம திட்டங்களை தயாரிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டு, அடுத்த ஆண்டுகளில் பங்குதார முகவர் மூலம் அவர்களின் பரிந்துரைகளை செயற்படுத்த ஆலோசிக்கப்பட்டது. இந்த நடவடிக்கை மூலம் கிராமப்புற நிலங்களின் உற்பத்தித்திறனை அதிகரிக்கவும், பல்லுயிரியலை பாதுகாக்கவும், எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக நிலங்களை ஒதுக்கவும், நீரேந்து பிரதேசங்களை பாதுகாப்பதற்கும், பேணுவதற்கும்;. மேலும், கிராமப்புற சமூகத்தின் பொருளாதார நிலைமையை மேம்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 98.72% மற்றும் ஒதுக்கப்பட்ட நிதி ரூ.4.89 மில்லியன் ஆகும். 2018ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதியில் நிதி முன்னேற்றம் 72% ஆகும்.

**கிராம மட்டத்தில் காணிப் பயன்பாட்டுத் திட்டம் தயாரித்தல் (பல்வேறு சந்தர்பங்களில் பங்குபற்றும் கிராம மதிப்பீடு)**

படம் இல.12

யாழ்ப்பாண மாவட்டம் - பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் பங்குபற்றும் கிராம மதிப்பீடு



படம் இல.13

காலி மாவட்டம் - ஹிக்கடுவ பிரதேச செயலாளர் பிரிவில் பங்குபற்றும் பங்குபற்றும் கிராம மதிப்பீடு



படம் இல.14, 15

இரத்தினபுரி மாவட்டம் - இரத்தினபுரி மற்றும் அம்பிட்டிய பிரதேச
செயலாளர் பிரிவு - பங்குபற்றும் கிராம மதிப்பீடு





படம் இல.16, 17

திருகோணமலை மாவட்டம் - பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர்
பிரிவில் பங்குபற்றும் கிராம மதிப்பீடு






## 5.7. பங்குபற்றும் அணுகுமுறை மூலம் சிறு நீரேந்து பிரதேசங்களுக்கு காணிப் பயன்பாட்டுத் திட்டம் தயாரித்தல்

காணிப் பயன்பாட்டுத் திட்டமிடலிற்கு புவியியற் பிரதேசத்தை தெரிவு செய்யும்போது இயற்கையாக நீரின் இயற்கையான ஓட்டத்தை கருத்திற் கொள்வது நல்லது. பெரியளவிலான காணிப் பயன்பாட்டுத் திட்டங்களுக்கு ஆற்று வடிநிலங்களைத் தெரிவுசெய்வதும், சிறியளவிலான திட்டமிடலிற்கு துணை நீரேந்து பிரதேசங்களை அல்லது சிறு நீரேந்து பிரதேசங்களைத் தெரிவுசெய்வதும் பொருத்தமானதாகும். நீரேந்து பிரதேசங்களின் பெரும்பகுதி ஏற்கனவெ பல்வேறு தேவைகளுக்காக பயன்படுத்தப் பட்டு வருவதால் காணிப் பயன்பாட்டுத் திட்டமிடலிற்கு சமூக பங்கேற்பைப் பெறவேண்டியது கடமையாகும். ஆகையால் சிறு நீரேந்து பிரதேசங்களுக்கு காணிப் பயன்பாட்டுத் திட்டம் தயாரிப்பது முக்கியமாகும், மேலும் இப்பகுதி பல காணிப் பயன்பாட்டு பிரச்சினைகளை கொண்டுள்ளது. சிறு நீரேந்து பிரதேசங்கள் பல கிராமசேவையாளர் பிரிவுகளை அல்லது பிரதேச செலாளர் பிரிவுகளை உள்ளடக்கும்.

இந்த திட்டத்தின் குறிக்கோள்கள், கிராமிய அளவிலான காணிப் பயன்பாட்டு திட்டமிடலின் குறிக்கோள்களை விடவும் பரந்ததாக இருக்கின்றன, மேலும் புவியியல் ரீதியாக திட்டமிடல் பகுதி கிராமத்தை விட பெரியதாகும்.

திட்டமிடல் செயல்பாட்டில் பரந்த சமூக பங்கேற்பு மற்றும் சமூக அடிப்படையிலான திட்டங்களுக்கு முன்னுரிமைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டது.

2018 ஆம் ஆண்டின் செயற்திட்டத்தின்படி 99 சிறு நீரேந்து பிரதேசங்களுக்கு திட்டங்களை தயாரிப்பதற்கு தேர்வு செய்யப்பட்டது. பௌதீக முன்னேற்றம் 98.7% மற்றும் ஒதுக்கீடு ரூ.2.77மில்லியன் வழங்கப்பட்டது. 2018 டிசம்பர் 31 ஆம் தேதியில் நிதி முன்னேற்றம் 99.99% ஆகும்.

### சிறு நீரேந்து பிரதேசங்களுக்கு காணிப் பயன்பாட்டுத் திட்டம் தயாரித்தல்

படம் இல.18, 19

இரத்தினபுரி மாவட்டம் - பலாங்கொட பிரதேச செயலாளர் பிரிவில் பங்குபற்றும் கிராம மதிப்பீடு



படம் இல.20

மாத்தளை மாவட்டம் - நாஉல பிரதேச செயலாளர் பிரிவில் பிரிவுகளில் பங்குபற்றும் கிராம மதிப்பீடு





படம் இல.21

மாத்தளை மாவட்டம் - கலேவல பிரதேச செயலாளர் பிரிவில் பிரிவுகளில் பங்குபற்றும் கிராம மதிப்பீடு





**5.8. மண் மற்றும் நீர் பாதுகாப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் குறைந்த பாவனையிலுள்ள விவசாய நிலங்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்தல்**

குறைந்த பாவனையிலுள்ள விவசாய நிலங்களை அபிவிருத்தி செய்யவேண்டியது தேசியரீதியில் முக்கியமானதாகும், அவை ஏற்கனவே மாவட்ட மற்றும் பிரதேச காணிப் பயன்பாட்டுத் திட்டத்தில் அடையாளங் காணப்பட்டுள்ளன. குறைந்த பாவனையிலிருப்பதற்கு பல காரணங்கள் இருக்கலாம். மேலும் இதற்கான காரணங்களும் காணிப் பயன்பாட்டுத் திட்டத்தில் அடையாளங் காணப்பட்டுள்ளன. அவ்வாறான நிலங்களில் மண்ணரிப்பு மற்றும் மண்ணின் ஈரப்பதன் குறைதல் ஆகியன விளைச்சல் குறைவதற்கு பிரதான காரணங்களாகும். மண் மற்றும் நீர் பாதுகாப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நிலம் வளம் குறைதலை குறைக்க உதவுகிறது.

மண் மற்றும் நீர் பாதுகாப்பு முறைகளால் நிலத்தின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதன் மூலம் உள்நாட்டு உணவு உற்பத்தியை அதிகரிக்க எதிர்பார்க்கப் படுகிறது.

இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பகுதிகள் தொடர்ச்சியாக கண்காணிக்கப் படும் மற்றும் முன்னேற்றம் மதிப்பீடு செய்ய தரவு அளவுகோலாக, அடிப்படையுடன் ஒப்பிடுகை செய்யப்படும்.

2018 ஆம் ஆண்டின் செயற்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு 100 திட்டங்களுக்காக ரூ.8.69 மில்லியன் வழங்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதியில், திட்டத்தின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் முறையே 99.76% மற்றும் 99.03% ஆகும்.

## தெரிவு செய்யப்பட்ட நிலங்கள் மற்றும் இந்நிலங்களில் பாதுகாப்பு நடைமுறைப்படுத்தல்

படம் இல.24

கம்பஹா மாவட்டம் - ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவு

**மண் பாதுகாப்பு நடவடிக்கைக்கு முன்னைய நிலை**




மண் பாதுகாப்பு முறை உருவாக்கிய பின்னர் மண் பாதுகாப்பு முறை நடைமுறைப்படுத்தல்

படம் இல.25 , 26

**கொம்போஸ்ட் பசளை தயாரித்தலின் போது**

குருநாகல் மாவட்டம் - மகாவ பிரதேச செயலாளர் பிரிவில் மண் மற்றும் நீர் பாதுகாப்புத் திட்டம் செயற்படுத்தலின் கீழ் வீட்டுத் தோட்டத்தில் சேதனப் பசளை உற்பத்தி





## 5.9. தாழ்நில ஈரவலயத்திலுள்ள நெற்செய்கை நிலங்களை அவற்றின் உற்பத்தி இயலுமைக்கு ஏற்ப வகைப்படுத்தல்

இலங்கையின் உலர் மற்றும் இடை வலையங்களில் பெரும்பாலான நெற்செய்கை நிலங்கள் அமைந்துள்ளன. ஒப்பீட்டளவில், ஈரவலையத்திலுள்ள வயல் நில அளவு பரவலாக உள்ளதில் சிறியளவாகும். ஈர வலயத்தில் நிலத்திற்கு அதிக தேவை இருப்பதால், பெருமளவு நெற்செய்கை நிலங்கள் வேறு தேவைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது. கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் காலி மாவட்டங்களில், நகரமயமாக்கல் துரிதமான நடைபெறுவதால் இப்பகுதிகளில் இது பொதுவான ஒன்றாகும். ஈர வலையத்தில் நெற்செய்கை கைவிடப்படுவது ஒரு பெரிய பிரச்சினையாகும்.

கைவிடப்படுவதற்கும் மற்றும் பிற நோக்கங்களுக்காக நெற் செய்கை நிலங்கள் உபயோகிக்கவும் பல்வேறு காரணங்கள் உள்ளன. இந்த காரணங்கள் சமூக-பொருளாதார அல்லது மற்றய கட்டுப்படுத்தல்கள் அல்லது இரண்டும் இருக்கலாம். அதே சூழலில் உள்ள நெற்செய்கை நிலங்களின் உற்பத்தித்திறன் வேறுபட்டதாக இருக்கலாம், குறிப்பாக நிலங்களின் பௌதீக கட்டுப்படுத்தல்கள் காரணமாக இருக்கலாம். கட்டுப்படுத்தல்கள் மாறுபடும், இதனால் உள்ளீடுகள் மற்றும் விளைச்சல் மாறுபடும்.

சில சந்தர்ப்பங்களில் நெற்செய்கைக்கு மிகவும் பொருத்தமான நிலங்கள் வேறு தேவைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது. அதேவேளை நெற்செய்கைக்கு மிக குறைந்த பொருத்தமான நிலங்கள் பயன்படுத்தப்படுகிறது. நிலங்களை தெரிவு செய்யாது நெற்செய்கை பண்ணுவது நிலங்கள் வகைப்படுத்தப்பட்டு இருக்காத தினாலாகும். வயல் நிலங்கள் அவற்றின் இயல்தகவுக்கு ஏற்ப வகைப்படுத்த முடியுமெனில் நெல் பயிரிடுதலுக்கான பொருத்தமான நிலங்களை தெரிவுசெய்து உற்பத்தித்திறனை அதிகரிக்க முடியும்.

அத்துடன் நிலங்களை பிற நோக்கங்களுக்காக பயன்படுத்த முடிவு செய்வதற்கான ஒரு கருவியாக இத்தகைய வகைப்படுத்தலை பயன்படுத்தப்படலாம். மேலும், இந்த வகைப்படுத்தல் கைவிடுவதற்கான காரணங்களை கண்டறிய உதவும். அவை பௌதீக காரணிகளாகவோ அல்லது சமூக-பொருளாதார காரணிகளாகவோ அல்லது இரண்டுமாகவோ இருக்கலாம், இந்த வகைப்பாடுத்தல் மூலம் நெற்செய்கை பண்ணலாம் அல்லது பிற நோக்கங்களுக்காக பயன்படுத்தலாம்.

காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம் மற்றும் ஹெக்டர் கொப்பேகடுவ ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தினால் கொழும்பு, மாவட்டத்தில் முன்னோடி திட்டம் மேற்கொள்ளப்பட்டதுடன் தாழ்நில ஈர வலயத்தில் நெற்செய்கை நிலங்களை வகைப்படுத்த முறையியல் உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தின் வெற்றியை அடிப்படையாகக் கொண்டு தாழ்நில ஈரவலயத்திலுள்ள ஐந்து மாவட்டங்களில் நெற்செய்கை நிலங்களை வகுப்பாக்கல் செய்வதற்கு திட்டமிடப் பட்டுள்ளது. இந்த வகுப்பாக்கலைப் பயன்படுத்தி நான்கு வகுப்புகளாக வகைப்படுத்தி நெற்செய்கைக்கு மிகவும் பொருத்தமான நிலங்களை கண்டறிவதுடன் வேறு தேவைகளுக்கு பொருத்தமான நிலங்களை அடையாளங் காணவும் வேண்டும். இந்த தகவல் சம்பந்தப்பட்ட முகவர்களுக்கு முடிவெடுப்பதற்கு மிகவும் முக்கியமாகும். மேலும் நெற்செய்கைக்கு பொருத்தமான நிலங்களை பாதுகாக்கவும் உதவுகிறது. இந்த திட்டம் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்டது.

2018ஆம் ஆண்டின் செயற்திட்டத்தில் இத்திட்டத்திற்கு ரூ.0.597 மில்லியன் ஒதுக்கப்பட்டது. மேலும் இதன் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் முறையே 97.89% மற்றும் 96.8% ஆகும்.

## 5.10. மாவட்டத்திலுள்ள குறிப்பிட்ட காணிப் பயன்பாட்டுப் பிரச்சனைகளை பற்றிய விஷேட ஆய்வுகள் நடாத்தல்

பாதுகாக்க வேண்டிய பகுதிகள் இருத்தல், பயன்படுத்தப்படாத நிலங்கள் இருத்தல், குறைந்தளவில் பயன்படுத்தப்படும் காணிகளின் இருப்பு மற்றும் தவறான பயன்படுத்தல் ஆகிய காணிப் பயன்பாட்டுப் பிரச்சினைகள் பிரதேச காணிப் பயன்பாட்டு திட்டமிடல் மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளன. இருப்பினும் இந்த பிரச்சினைகள் சில பிரிவுகளில் மிகவும் கவனிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சில பிரிவுகளில் ஒரு எடுத்துக்காட்டுக்கு, நில உரிமை பிரச்சினை மேல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை விட முக்கியமானது. வேலையாள், உவர்த் தன்மை, வெள்ளம், மண் அரிப்பு ஆகியன மற்றொரு புறம் காணிப் பயன்பாட்டில் ஆதிக்கம் செலுத்தும் பிரச்சினையாக இருக்கலாம். பல்வேறு காரணங்களால் நிலங்களின் உற்பத்தித்திறன் குறைவாக இருப்பதோடு, இந்த காரணங்களும் நீர் ஆதாரங்கள், நீரோடைகள், நீர்த்தேக்கங்கள் மற்றும் குளங்கள் போன்றவற்றின் சுற்றாடலை அழிக்கக்கூடும். பிரச்சினைகள் குறிப்பிட்ட இடத்திற்கேற்ப மாறுபட்டவையாக இருகும். எனவே பிரச்சினைகளின் இயல்பு ஒரு இடத்திலிருந்து வேறு இடத்திற்கு மாறுபடும். மாவட்ட, பிரதேச, கிராமசேவையாளர் பிரிவு அல்லது கிராம மட்டத்திலான எந்தவொரு மட்டத்திலும் சிக்கல்கள் இருக்கலாம். உதாரணமாக, மாஓயா நீரேந்து பிரதேசத்தில் தரமிழந்த நிலங்களை புனரமைப்பதற்காக தயாரிக்கப்பட்ட திட்டத்தில் களிமண் அதிகமாக அகழப்படுவது கவனிக்கப்பட வேண்டியதாகும். இந்த ஆய்வு மூலம், தவறான பயன்பாட்டைக் குறைத்தல், நீரேந்து பிரதேசத்தில் நடவடிக்கைகளை திட்டமிடுதல், களிமண் அளவைக் எதிர்வுகூறல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் 10கைத்தொழில் வளர்ச்சியை சமநிலைப்படுத்துதல், நீரேந்து பிரதேசத்தை புனரமைத்தல், அனுமதிப் பத்திரம் வழங்குதலை ஒழுங்குபடுத்தல், நீரேந்து பிரதேசத்தை பாதுகாத்தல் மற்றும் நிலம் தரமிழத்தை குறைத்தல் ஆகியன எதிர்பாக்கப்படுகிறது.

அதன்படி, மக்களுக்கு உயர்ந்தளவில் செல்வாக்கைக் கொண்டிருக்கும் சிக்கல்களைக் கண்டறிந்து, சிபாரிசுகளை உருவாக்குவதே நோக்கமாக இருக்கிறது. இந்த பரிந்துரைகளை செயல்படுத்துவதன் மூலம், காணிப் பயன்பாட்டை மேம்படுத்தவும் உற்பத்தித்திறனை அதிகரிக்கவும் எதிர்பார்க்கப்பட்டது. ஆய்வு ஒரு வருடத்திற்குள் முடிக்கப்பட வேண்டும் மற்றும் பங்குதார முகவர் மூலம் பரிந்துரைகளை செயல்படுத்த ஒரு திட்டம் தயாரிக்கப்படும்.

72 விசேட ஆய்வுகளுக்காக ரூ.3.63 மில்லியன் ஒதுக்கப்பட்டது. இதன் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் முறையே 96.92% மற்றும் 97.89% ஆகும்.

## 5.11. தரமிழந்த விவசாய நிலங்களை அடையாளப்படுத்தல், வகைப்படுத்தல் மற்றும் வரைபடமாக்கல்

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சினால் நிலம் தரமிழத்தல் மற்றும் வறட்சியை எதிர்கொள்ளும் தேசிய செயற்திட்டம் 2002ம் ஆண்டு தயாரிக்கப்பட்டது. இலங்கை கையொப்பமிடப்பட்ட 1994ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மாநாட்டின் பிரகடனம் நிலம் வளங் குறைதலை மற்றும் வறட்சியை எதிர்கொள்ளல் இற்கு அமைவாக இந்த விடயம் தொடர்பாக காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தினால் 2002ம் ஆண்டு தொடக்கம் பல திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டது. சில முன்னுரிமை திட்டங்களாக நீர் வளங்களை அடையாளம் காணல் மற்றும் தரவு தளத்தை நிறுவுதல், தேசிய காணிப் பயன்பாட்டுக் கொள்கைக்கான அனுமதி பெறல், நீரோடைகள் மற்றும் ஆறுகளின் ஒதுக்கீடு செய்யப்பட்ட பகுதிகளை பாதுகாக்க முன்னோடித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல், தரமிழந்த விவசாய நிலங்களை புனரமைத்தல் ஆகியன செயற்படுத்தப்பட்டன. எவ்வாறாயினும், தரமிழந்த நிலங்கள் பற்றிய இடம் சார்ந்த தரவுகள் பற்றாக்குறையாக இருப்பது சிறந்த புனரமைக்கும் திட்டங்களை தயாரிப்பதற்குள்ள பிரச்சனையாகும். நிலம் தரமிழந்துள்ள நிலைமை பற்றிய தகவல் இருப்பின் தரமிழந்த நிலங்களை புனரமைப்பதற்கான பரிந்துரைகளைத் செய்வது எளிதாகும்.

நிலம் தரமிழந்துள்ள நிலையை அளவு செய்து அவற்றை குறைவான, மிதமான மற்றும் உயர்ந்தளவில் தரமிழந்துள்ளது என வகைப்படுத்தலாம். ஆகையால் தரமிழந்த விவசாய நிலங்களை அடையாளம் காணல், வகைப்படுத்தல் வரைபடமாக்கல் செயற்பாடுகள் இத் திணைக்களத்திற்கும் அதேபோல ஏனைய நிறுவனங்களுக்கும் முக்கியமாகும்.

இத்திட்டத்தின் குறிக்கோள், இவ்வகை நிலங்களை அடையாளம் காண்பது மற்றும் வகைப்படுத்துவதன் மூலம் உற்பத்தித்திறனை அதிகரிக்க தரமிழந்த நிலங்களை புனரமைக்க வழிகாட்டுவதாகும்.

2018 ஆம் ஆண்டின் செயற்திட்டத்தில் 25 திட்டங்களுக்கு ரூ.0.651 மில்லியன் வழங்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதியில் நிதி முன்னேற்றம் மற்றும் பௌதீக் முன்னேற்றம் 93.08% மற்றும் 98.28% ஆக இருந்தன.

### 5.12. தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் நிலச்சரிவு ஏற்படக்கூடிய இடங்களை உறுதிப்படுத்துவதற்கு பொருத்தமான நில பயன்பாட்டு பரிந்துரைகளை வழங்குதல்.

இயற்கைப் அனர்த்தத்தை குறைப்பதற்கு நில வள முகாமைத்துவத்தில் சிறப்பு கவனம் தேவைப்படுகிறது. பூகோள வெப்பமயமாதலின் விளைவாக மழை வீழ்ச்சியில் கடுமையான மாற்றங்கள் காரணமாக கடந்த பல ஆண்டுகளில் ஆசிய பிராந்தியத்தில் பல அனர்த்தங்கள் ஏற்பட்டன. கடந்த பல வருடங்களாக, நிலச்சரிவு காரணமாக இலங்கையின் சுற்றுச்சூழல், வாழ்வாதாரங்கள் மற்றும் பொருளாதாரம் ஆகியனவற்றிற்கு மிகவும் பாதிப்பேற்பட்டுள்ளது.

எனவே, நலன்புரி மற்றும் சொத்து மறுவாழ்வுக்காக வருடாந்திர செலவு அதிகரிக்கப்பட்டுள்ளது. எனவே, நிலச்சரிவுகளின் அனர்த்தத்தை குறைக்க தேசிய அளவில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

நிலச்சரிவு ஒரு இயற்கை நிகழ்வு எனினும், அதன் தாக்கம் பரந்தளவானது மற்றும் மனித நடவடிக்கைகள் (நிலத்தில் தவறான பயன்பாடுகள்) அதன் தீவிரத்தை அதிகரிக்கிறது, நிலச்சரிவுகள் அல்லது அதன் பாதிப்புகளை குறைக்க ஒரு திட்டமிடப்பட்ட திட்டம் அவசியமாகும்.

இந்த சூழ்நிலையை கருத்தில் கொண்டு, நிலச்சீர்திருத்த வாய்ப்புள்ள பகுதிகளில் அனர்த்தங்களை குறைப்பதற்கு காணிப் பயன்பாட்டு திட்டமிடல் வழிமுறைகளின் சாத்தியக்கூற்றை அடையாளம் காண, காணி உபயோக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம் 2018 ஆண்டு செயற்திட்டத்தின் மூலம் ஒரு முயற்சி எடுத்தது.

தற்போது இருக்கும் தகவல்கள் ஆராய்ச்சி கண்டுபிடிப்புகள் மற்றும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தால் செய்யப்பட்ட வெளிக்கள விசாரணைகளின் அடிப்படையில் பொருத்தமான காணிப் பயன்பாட்டு தெரிவுகள் மூலம் நிலச்சரிவு அபாயத்தையும் அதன் பாதிப்புகளையும் குறைக்கலாம் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த செயற்பாடு கடுமையான நிலச்சரிவுகள் பதிவாகியுள்ள 07 மாவட்டங்களில் 10 இடங்களில் நடத்தப்பட்டது. 2018ஆம் ஆண்டில் இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போதிலும்,

தொடர்ச்சியான கண்காணிப்பு செயற்பாடுகளுடன் குறைந்த பட்சம் 05 வருடங்களுக்கு இத்திட்டத்தை முன்னெடுக்க தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் பரிந்துரைததுள்ளது.

அதன்படி, 2018ஆம் ஆண்டு ஒரு அடிப்படை ஆண்டாக கருதப்படுகிறது. 2019ஆம் ஆண்டு முதல் பங்குதார முகவர்களால் பரிந்துரைக்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை, கண்டி, மாத்தளை, நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களில் 10 இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. இந்த திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட பரிந்துரைக்கள் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுக்கு ஏற்கனவே அறிமுகமானவை மற்றும் 2019 ஆம் ஆண்டிலிருந்து இந்த பங்குதாரர்களின் பரந்த பங்கேற்பு இந்த பரிந்துரைக்களை நடைமுறைப்படுத்த பரிந்துரைக்கப்படுகிறது.

வருடத்தின் இலக்காக ரூ.0.96 மில்லியன் மேற்குறிப்பிட்ட மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதியில் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் முறையே 98.38% மற்றும் 94% ஆகும்.

## 5.13. பிற நிறுவனங்களுக்கு டிஜிரல் தரவு மற்றும் வரைபடங்களை வழங்கல்

2017ஆம் ஆண்டின் தேசிய காணிப் பயன்பாடு பற்றிய ஆய்வு மூலம் உருவாக்கப்பட்ட காணிப் பயன்பாட்டுத் தகவலைப் பெற அரசு நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் கருத்திட்டங்களால் தொடர்ச்சியான கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன. இந்த கோரிக்கைகள் பெரும்பாலும் தகவல்கள் டிஜிட்டல் வடிவில் ஆகும், இது ஒரு பூகோள-தரவுத்தளத்தில் உள்ளது. இந்தத் தரவு திணைக்களம் மற்றும் கோரிக்கை வைக்கும் நிறுவனத்திற்கு இடையில் ஒரு பரஸ்பர ஒப்பந்தத்துடன் இலவசமாக வழங்கப்படுகிறது. காணி உபயோக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தில் தரவை பெற்றுள்ள நிறுவனங்களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

## காணி பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்திடம் கோரப்பட்ட டிஜிரல் தரவு -2017 - 2018

அட்டவணை 5: 13: 1

| நிறுவனம் | குறிக்கோள் | தரவு கோரப்பட்ட பிரதேசம் |
|---|---|---|
| **அரச நிறுவனங்கள்** | | |
| இலங்கை மின்சார சபை | நீரேந்து பிரதேசங்களில் நீரியல் ஆய்விற்காக | சீதாவக்க கங்கை மேற் பகுதி |
| பிரதம செயலாளர் - மேல்மாகாணம் | புள்ளி விபரங்கள் புத்தகம் தயாரிப்பதற்கு | இலங்கையின் காணிப் பயன்பாட்டு தகவல்கள் |
| கரையோரப் பாதுகாப்பு திணைக்களம் | கரையோர பாதுகாப்பு மற்றும் சுற்றுலா பெருந்திட்டம் தயாரிப்பதற்காக | புத்தளம் / காலி / கம்பஹா / மாத்தறை / கொழும்பு / களுத்துறை மாவட்டங்கள் |
| தென்னை அபிவிருத்தி அதிகார சபை | தென்னை பரம்பலை அடையாளம் காண்பது | வவுனியா / மன்னார் மாவட்டம் |
| அனர்த்த முகாமைத்துவ நிலையம் | அனர்த்த முகாமைத்துவ தரவுகள் பற்றிய இணையதளம் உருவாக்க | இலங்கையின் காணிப் பயன்பாட்டு வரைபடம் |
| நீர்ப்பாசன திணைக்களம் | வெள்ள அனர்த்தங்களைக் குறைப்பதற்கான ஆய்வு மெற்கொள்வதற்காக | மட்டக்களப்பு / மொனராகலை / அம்பாந்தோட்டைமாவட்டங்களமாவட்டங்கள் |
| மகாவலி அதிகார சபை | தற்போதைய காணிப்; பயன்பாட்டைக் கண்டறிவதற்காக | பதியத்தலாவ மற்றும் மஹாஓயா பிரதேச செயலகம் |
| விவசாய அமைச்சு | நெல் பயிர்ச்செய்கை பற்றிய தகவல்களை சேகரிக்க | இலங்கையில் நெற் பயிர்ச்செய்கை திட்டம் |
| மகாவலி மற்றும் சுற்றாடல் அமைச்சு | காலநிலை மாற்றம் மற்றும் அதன் தாக்கம் பற்றிய ஆய்வு | அனைத்து மாவட்டங்களதும் தரவு |
| மகாவலி மற்றும் சுற்றாடல் அமைச்சு | காலநிலை மாற்றத்தால் ஏற்படும் தாக்கம் மதிப்பீடு செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் | அனைத்து மாவட்டங்களதும் தரவு |
| மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி | மத்திய அதிவேக நெடுஞ்சாலை வலையத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக | மத்திய மாகாண தரவு |
| தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு | நெல் உற்பத்தி அளவை முன்னறிவிப்புச் செய்வதற்காக | இலங்கையில் நெற் பயிர்ச்செய்கைத் திட்டம் |
| போக்குவரத்து அமைச்சு | ராஜரட்ட எழுச்சித் திட்டம் | குருநாகல், மாத்தளை/ அனுராதபுரம் / பொலன்னறுவை மாவட்டங்கள் |
| தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை | காலநிலை மாற்ற முகாமைத்துவ திட்டம் | வவுனியா மாவட்டம் |
| தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை | நீர்ப் பாதுகாப்பு திட்டம் தயாரித்தல் | ருவன்வெல்ல / வாரக்கபொல |
| தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை | கிராம சாத்தியத்தன்மை ஆய்வு | வவுனியா மாவட்டம் |
| இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிலையம | இறப்பர் பயிரிடப்பட்டுள்ள இடங்களை அடையாளங்காணல் | களுத்தறை மாவட்டம |
| இலங்கை உள்ளூராட்சி நிறுவனம் | இலங்கையில் சனத்தொகை முகாமைத்துவம் பற்றிய ஆய்வு | 9 நகரங்கள் |
| நகர அபிவிருத்தி அதிகாரசபை | 2018-2030 வரைக்கான அபிவிருத்தி திட்டத்தை தயாரிப்பதற்காக, | ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவு |
| நகர அபிவிருத்தி அதிகாரசபை | பொரலஸ்கமுவ மற்றும் ஹோமாகம அபிவிருத்தி திட்டத்தை தயாரிப்பதற்காக | ஹோமாகம / கஸ்பாவ பிரதேச செயலாளர் பிரிவு |
| பெண்கள் மற்றும் சிறுவர்; விவகாரம் மற்றும் உலர் வலைய அபிவிருத்தி அமைச்சு | திணைக்களத்தின் அபிவிருத்தி விடயங்களுக்காக | காலநிலை வலையம்; மற்றும் நிர்வாக பிரிவு |
| **பல்கலைக்கழகம்** | | |
| மொறட்டுவை பல்கலைக்கழகம் | ஆராய்ச்சிக்காக | பத்தரமுல்ல |
| சனச வளாகம் | ஆராய்ச்சிககாக | இரத்தினபுரி /கொழும்பு / கேகாலை / கம்பஹா மாவட்டங்கள் |
| முதுகலை பட்டதாரி கல்வி நிறுவனம் - பேராதனை பல்கலைக்கழகம் | ஜிங்கங்கா திட்டம் | கங்காபா பிரதேசம் |

| | | |
|---|---|---|
| முதுகலை பட்டதாரி கல்வி நிறுவனம் - பேராதனை பல்கலைக்கழகம் | எல் லங்கா முறைமை பற்றிய ஆய்வு | முhத்தளை மாவட்டம் |
| கொழும்பு பல்கலைக்கழகம் | கல்வி பிரிவு | ரத்தெகொட கிராம உத்தியோகத்தர் பிரிவு |
| கொழும்பு பல்கலைக்கழகம் | கல்வி நடவடிக்கைகள் | மடுல்ல பிரதேச செயலகம் |
| கொழும்பு பல்கலைக்கழகம் | முதுகலை பட்டதாரி கல்வி நடவடிக்கைகள் | அநுராதபுரம் / பொலன்னறுவ / வவுனியா மாவட்டங்கள் |
| களனி பல்கலைக்கழகம் | ஆய்வு நடவடிக்கைகள் | உமா ஓயா துணை நீரேந்து பிரதேச ஆய்வு |
| களனி பல்கலைக்கழகம் | ஆய்வு நடவடிக்கைகள் | மததும்பர / திரப்பன பிரதேச செயலகம் |
| பேராதனை பல்கலைக்கழகம் | ஆய்வு நடவடிக்கைகள் | 6 மாவட்டங்கள் |
| உருகுணை பல்கலைக்கழகம் | ஆய்வு நடவடிக்கைகள் | யாழ்ப்பாணம்ஃமுல்லைத்தீவு / மட்டக்களப்பு/அம்பாறை / மாத்தளை / பதுளைஃ மொனராகலை / அனுராதபுரம் |
| சப்பிரகமுவ பல்கலைக்கழகம் | ஆய்வு நடவடிக்கைகள் | கொழும்பு மாவட்டம் |
| சப்பிரகமுவ பல்கலைக்கழகம் | ஆய்வு நடவடிக்கைகள் | கடுவெல பிரதேச செயலாளர் பிரிவு |
| சப்பிரகமுவ பல்கலைக்கழகம் | ஆய்வு நடவடிக்கைகள் | காலி / மாத்தறை மாவட்டங்கள் |
| ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | ஆய்வு நடவடிக்கைகள் | திஹாகொட புளத்சிங்கள / ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவுகள் |
| ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | ஆய்வு நடவடிக்கைகள் | மத்தள விமான நிலைய பிரதேசம் |
| ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | ஆய்வு நடவடிக்கைகள் | ஹம்பாந்தோட்டை, கஸ்பாவ பிரதேச செயலாளர் பிரிவுகள் |
| சப்பிரகமுவ பல்கலைக்கழகம் | ஆராய்ச்சி | கடுவெல பிரதேச செயலாளர் பிரிவு |
| **திட்டம்** | | |
| கிரிப் திட்டம் - நீர் பாசனத் திணைக்களம் | வெள்ள அபாய ஆய்வு | அனைத்து ஆற்றுப் பெருநிலம் |
| ஐ.யூ.சி.என். திட்டம் | பல்லுயிர்தன்மை ஆயு;வ | ஆற்றுவாயில் 33 |
| ஐ.யூ.சி.என். திட்டம் | பல்லுயிர்தன்மை ஆயு;வ | பதுளை / கம்பஹா / முல்லைத்தீவு / மன்னார் / பொலன்னறுவ மாவட்டங்கள் |
| கேகாலை பெருந்தோட்டத் திட்டம் | வெளிக்கள ஆய்வு | புளத்சிங்கள பிரதேச செயலாளர் பிரிவு |
| தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் | ஆராய்ச்சி | முந்தல் / மட்டக்களப்பு / கொக்கிளாய் / சிலாபம்; |
| தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் | 5 களப்புகளின் சுற்றுச்சூழல் தரவு | புத்தளம் / நீர்கொழும்பு / ரக்கவ / கொக்கிளாய் / பனாமா களப்பு |
| தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் | நிலச்சரிவு அபாயகரமான பகுதிகளில் ஆய்வு | கேகாலை மாவட்டம் |
| தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் | | களுத்துறை / இரத்தினபுரி / காலி / மாத்தறை மாவட்டங்கள் |
| போறியிலாளா மற்றும் கட்டிட கலைஞர்களின் ஆலோசனை பேரவை | மீள்குடியேற்றுவதற்காக | கொழும்பு / கேகாலை / கம்பஹா மாவட்டங்கள் |
| மரபியல் நிறுவனம் | நிலையான அபிவிருத்திக்காக | பதுளை மாவட்டத்தில் பிரதேச செயலக பிரிவு 3 |

### 5.14. பிற திட்டங்கள்

**(i) தேசிய சுற்றாடல் பாதுகாப்புத் திட்டம்** (புனருதய)

ஜனாதிபதி செயலகத்தின் நிதி பங்களிப்புடன் 2016-2018 ஆம் ஆண்டு தேசிய சுற்றாடல் பாதுகாப்புத் திட்டம் (புனருதய) நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த திட்டத்தின் கீழ் மண் மற்றும் நீர் பாதுகாப்பு மற்றும் நீர் வளங்களைப் பாதுகாப்பதற்காக ஒரு செயல் திட்டம் தயாரிக்கப்பட்டது. பின்வரும் குறிக்கோள்கள் அடையப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

- நீர்தேக்கங்களின் பாதுகாப்பு
- மண் பாதுகாப்பு நடவடிக்கைகளை நிறுவுதல்
- நிலம் தரமிழத்தலை தடுத்தல்
- நில உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்
- நிலையான காணிப் பயன்பாட்டு விருப்பத்தெரிவுகளை பிரபலப்படுத்துதல்

இந்த திட்டம் 2018ஆம் ஆண்டில் 10 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த்த மாவட்ட செயலாளர்களுக்கு ரூ 31.3 மில்லியன் ஒதுக்கீடு வழங்கப்பட்டது. இதில் மண் பாதுகாப்பு, பேணுதல், மற்றும் காணிப் பயன்பாட்டை மேம்படுத்தல ஆகிய திட்டங்கள் அடங்குகிறது. மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களின் மேற்பார்வையின் கீழ் இந்த திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் தொழில்நுட்ப வழிகாட்டலில் இந்த நிகழ்ச்சித்திட்டம் செயல்படுத்தப்பட்டது. 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி வரை பெதீக முன்னேற்றம் 100% ஆகும்.

இந்த திட்டத்தின் கீழ் நீரேந்து பிரதேசங்கள், ஆற்று வடிநிலங்கள், குளங்ககளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்கள், வீட்டுத் தோட்டங்கள் மற்றும் பிற விவசாய நிலங்கள் ஆகியவற்றில் மண் பாதுகாப்பு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் வெற்றிகரமாக பாதுகாக்கப்பட்டுள்ளன. 2018 நடவடிக்கைகளின் புகைப்படங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சி பின்வரும் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது.

01. கண்டி
02. மாத்தளை
03. நுவரெலியா
04. இரத்தினபுரி
05. கேகாலை
06. பதுளை
07 மொனராகலை
08. கம்பஹா
09 மாத்தறை
10. களுத்துறை

படம் இல. 27, 28
மொனராகலை மாவட்டத்தில் செவனகல பிரதேச செயலாளர் பிரிவில் மண் பாதுகாப்பு நடவடிக்கைக்கு முன்னைய நிலை





மண் பாதுகாப்பு முறை உருவாக்கிய பின்னர்

**படம் இல.** 29, 30





**படம் இல.**31

இரத்தினபுரி மாவட்டத்தில் இரத்தினபரி பிரதேச செயலாளர் பிரிவில் மண் பாதுகாப்புமுறை தாபிக்கப்பட்ட பின் வீட்டுத்தோட்டத்தின் தற்போதய காட்சி

**படம் இல.** 32

இரத்தினபுரி மாவட்டத்தில் கஹவத்த பிரதேச செயலாளர் பிரிவில் மண் பாதுகாப்பு நடவடிக்கையை பரீட்சிக்கும் போது





**படம் இல.**33, 34

களுத்துறை மாவட்டத்தில் பண்டாரகம பிரதேச செயலாளர் பிரிவில் மண் பாதுகாப்பு நடவடிக்கையை பரீட்சிக்கும் போது

களுத்துறை மாவட்டத்தில் தொடாங்கொட பிரதேச செயலாளர் பிரிவில் மண் பாதுகாப்பு நடவடிக்கையை பரீட்சிக்கும் போது




படம் இல. 35, 36 பதுளை மாவட்டம் - லுனுகல பிரதேச செயலாளர் பிரிவில் மண் பாதுகாப்பு நடவடிக்கைகள் நிறைவுபெற்ற காட்சி




படம் இல. 37, 38 கண்டி மாவட்டம் - உடுநுவர பிரதேச செயலாளர் பிரிவில் மண் பாதுகாப்பு நடவடிக்கைகள் நிறைவுபெற்ற காட்சி




**(ii) தரமிழந்த விவசாய நிலங்களை புனரமைக்கும் திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட சிறு நீரேந்து பிரதேசங்களிலுள்ள நிலங்களை மறுசீரமைக்கும் திட்டங்கள் தயாரித்தல்**

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு மூலம் உணவு வேளாண்மை அமைப்பின் நிதியுதவியுடன் மத்திய மலைநாட்டிலுள்ள பதுளை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் உள்ள சிறு நீரேந்து பிரதேசங்களில் உள்ள தரமிழந்த விவசாய நிலங்களுக்கு பங்கேற்கும் கிராம மதிப்பீட்டு அணுகுமுறை மூலம் நிலங்களை

மறுசீரமைக்கும் திட்டங்களை தயாரிக்கும் பணி இந்த திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதன்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட 32 சிறு நீரேந்து பிரதேசங்களுக்கு திட்டங்களை தயாரிக்க முன்மொழியப்பட்டது. திட்டங்களை தயாரிப்பதற்கான பொறுப்பு இந்தத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டது. மேலும், இந்த அனுபவத்தைப் பயன்படுத்தி பங்குபெறும் காணிப் பயன்பாட்டு திட்டமிடல் வழிகாட்டி தயாரிக்க பரிந்துரைக்கப் படுகிறது.

பதுளை மாவட்டத்தில் 16 திட்டங்களை நிறைவு செய்வதற்கும், கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் ஒவ்வொன்றிலும் 8 திட்டங்களாக 16 திட்டங்களை தயாரிப்பதற்காக திட்டமிடல் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டது. தற்போது பதினாறு திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. ஏனையவை 2019ஆம் ஆண்டு பூர்த்தியாகும், இந்த திட்டத்தின் பிரதான குறிக்கோள் மூலோபாயங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் மேலும் நிலம் தரமிழப்பதை தடுப்பதாகும். திட்டமிடல் கட்டத்தில் இருந்து செயல்படுத்தப்படும் அனைத்து நடவடிக்கைகளும் விவசாயிகளின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படுகின்றன.

**படம் இல.39, 40** கண்டி மாவட்டம் - குருகலே ராஜமலே நீரேந்து பிரதேசத்தில் மக்களுக்கு விழிப்புணர் ஏற்படுத்தும்போது





**படம் இல.41,42** கண்டி மாவட்டம் - குருகலே ராஜமலே நீரேந்து பிரதேசத்தில் வெளிக்களவேலையின் போது





## 5.15. திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட பிற செயற்பாடுகள்

2018 ஆம் ஆண்டில் பல்வேறு நிறுவனங்களின் வேண்டுகோளின் பேரில் நிலம் பொருந்திய அறிக்கைகளை வழங்குதல் என்பது திணைக்களத்தின் ஒரு முக்கிய செயற்பாடாகும். பல்வேறு நோக்கங்களுக்காக நிலம் தகுதியுடைய நிலையில் அவற்றின் பொருத்தப்பாட்டிற்கு அமைவாக பின்வரும் துறைகளில் கிட்டத்தட்ட 1003 காணிப் பொருத்தப்பாட்டு அறிக்கைகள் 25 மாவட்டங்களிலிருந்தும் வழங்கப்பட்டுள்ளது. விவசாய நடவடிக்கைகளுக்கு 168 அறிக்கைகளும், சுற்றுலா நடவடிக்கைகளுக்கு 40 அறிக்கைகளும், மீன்பிடி நடவடிக்கைகளுக்கு 12 அறிக்கைகளும், உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக 355 அறிக்கைகளும், காடுகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காக 186 அறிக்கைகளும், வணிக நோக்கங்களுக்காக 173 அறிக்கைகளும், கால்நடை வளர்ப்புக்காக 4 அறிக்கைகளும், வேறு நடவடிக்கைகளுக்கு 92 அறிக்கைகளும் வழங்கப்பட்டுள்ளன.

பின்வரும் அட்டவணையில் விரிவான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

திணைக்களத்தின் பிற செயற்பாடுகள்

அட்டவணை 5.15.1

| மாவட்டம் | செயற்பாடுகள் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | விவசாய செயல்பாடுகள் | சுற்றுலா செயற்பாடு | மீன்பிடி | உட்கட்டமைப்பு வசதிகள் | கால்நடை வளர்ப்பு | வனப் பாதுகாப்பு | வணிக செயற்பாடுகள் | ஏனைய செயற்பாடுகள் | மொத்தம் |
| கொழும்பு | 3 | | | 2 | | | 1 | 2 | 8 |
| கம்பஹா | 14 | | 7 | 10 | | 4 | 7 | | 42 |
| களுத்துறை | 6 | 1 | | 4 | | 1 | 5 | | 17 |
| புத்தளம் | 8 | 3 | 4 | 9 | 1 | 1 | 1 | | 27 |
| குருநாகல் | 9 | | | 80 | | 47 | 5 | 10 | 151 |
| பதுளை | 4 | 2 | | 16 | | 50 | 29 | 13 | 114 |
| மொனராகலை | 6 | 2 | | 9 | | 14 | 54 | | 85 |
| காலி | 3 | 2 | | 13 | | 2 | 4 | | 24 |
| மாத்தறை | 4 | 2 | | 13 | | 3 | 4 | | 26 |
| ஹம்பாந்தோட்டை | 4 | 2 | 1 | 14 | | 2 | 7 | | 30 |
| கேகாலை | 5 | | | 14 | | 2 | 3 | | 24 |
| இரத்தினபுரி | 17 | | | 14 | | | 4 | | 35 |
| மாத்தளை | 6 | 8 | | 15 | 2 | 14 | 23 | | 68 |
| கண்டி | 13 | | | 40 | | 4 | 2 | | 59 |
| நுவரெலியா | | | | | | 9 | 1 | | 10 |
| அனுராதபுரம் | 3 | 1 | | 5 | | | 5 | 18 | 23 |
| பொலன்னறுவை | 14 | 12 | | 3 | | | 2 | | 25 |
| திருகோணமலை | 6 | | | 19 | | 2 | 3 | | 26 |
| அம்பாறை | 8 | 1 | | 10 | | | 4 | 44 | 60 |
| மட்டக்களப்பு | 9 | 4 | | 60 | | 31 | 4 | 5 | 147 |
| யாழ்ப்பாணம் | | | | 2 | | | | | 2 |
| கிளிநொச்சி | 1 | | | | | | | | |
| முல்லைத்தீவு | | | | | | | | | |
| வவுனியா | 4 | | | 3 | 1 | | 5 | | |
| மன்னார் | | | | | | | | | |
| மொத்தம் | 168 | 40 | 12 | 355 | 4 | 186 | 173 | 92 | 1003 |

## 5.16. மாவட்ட திட்டங்களின் நிதி முன்னேற்றத்தின் சுருக்கம்

2018 ஆம் ஆண்டில் மாவட்ட செயற்திட்டங்களின் முன்னேற்றம் கீழே அட்டவணையிலும் வரைபடத்திலும் கொடுக்கப்பட்டுள்ளது

**<u>மாவட்ட மட்டத்தில் செயற்படுத்தப்பட்ட திட்டங்களின் நிதி முன்னேற்றம் -2018</u>**

அட்டவணை 5.16.1

| செயற்பாடு | 2018 ஆம் ஆண்டு செயற்திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூபா. மில்லியன் | 2018 ஆம் ஆண்டில் (திருத்தப்பட்ட) ஒதுக்கீடு ரூபா. மில்லியன் | 2018.12.31 திகதியில் நிதி முன்னேற் றம் ரூபா. மில்லியன் |
|---|---|---|---|
| வளங்குன்றாத காணிப் பயன்பாட்டுக்காக கிராமிய மட்டத்தில் காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் | 4.9 | 4.89 | 4.87 |
| பங்குபற்றும் அணுகுமுறை மூலம் சிறுநீரேந்து பிரதேசங்களுக்கு காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல்; | 2.8 | 2.28 | 2.27 |
| மண் மற்றும் நீர் பாதுகாப்பு மூலம் குறைந்த பாவனையிலுள்ள விவசாய நிலங்களின் உற்பத்தித்திறனை அதிகரித்தல் | 8.7 | 8.696 | 8.691 |
| தாழ்நில ஈரவலையத்திலுள்ள நெற் செய்கை நிலங்களை அவற்றின் இயல்தகவுக்கு ஏற்ப வகைப்படுத்தல். | 0.585 | 0.597 | 0.591 |
| மாவட்டத்தில் குறிப்பிட்ட காணிப் பயன்பாட்டுப் பிரச்சனைகளைப் பற்றி விஷேட ஆய்வு மேற்கொள்ளல் | 3.75 | 3.63 | 3.56 |
| வளம் குன்றிய விவசாய நிலங்களை அடையாளப்படுத்தல், வகைப்படுத்தல் மற்றும் வரைபடமாக்கல் | 0.665 | 0.651 | 0.606 |
| தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் நிலச்சரிவு ஏற்படக்கூடியதாக அடையாளங்காணப்பட்ட இடங்களுக்கு பொருத்தமான காணிப் பயன்பாட்டுத் தெரிவுகளை பரிந்துரை செய்தல் | 1.0 | 0.96 | 0.945 |
| நிலங்களின் நிலையான பயன்பாட்டிற்காக விழிப்புணர்வு திட்டங்கள், கருத்தரங்குகள்; மற்றும் கலந்துரையாடல்களை நடத்துதல் | 1.94 | 0.6 | 0.6 |
| மாவட்ட, பிரதேச மற்றும் கிராம மட்டத்தில் காணிப்பயன்பாட்டுத் திட்டமிடற் குழுக்கள் | 0.66 | 0.740 | 0.723 |

**மாவட்ட மட்டத்தில் செயற்படுத்தப்பட்ட திட்டங்களின் நிதி முன்னேற்றம்**

**வரைபடம்** இல. 5.16.1



## மாவட்ட மட்டத்தில் செயற்படுத்தப்பட்ட திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்

**அட்டவணை** 5.16.2

| செயற்பாடு | 2018 ஆம் ஆண்டு செயற்திட்டப்படி பௌதீக இலக்கு | 2018ம் ஆண்டு திருத்தப்பட்ட செயற்திட்டப்படி பௌதீக இலக்கு | 31.12.2818 வரை பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|
| வளங்குன்றாத காணிப் பயன்பாட்டுக்காக கிராமிய மட்டத்தில் காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் | 200 | 200 | 98.72 |
| பங்குபற்றும் அணுகுமுறை மூலம் சிறுநீரேந்து பிரதேசங்களுக்கு காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல்; | 100 | 99 | 98.70 |
| மண் மற்றும் நீர் பாதுகாப்பு மூலம் குறைந்த பாவனையிலுள்ள விவசாய நிலங்களின் உற்பத்தித்திறனை அதிகரித்தல் | 100 | 100 | 99.76 |
| தாழ்நில ஈரவலையத்திலுள்ள நெற் செய்கை நிலங்களை அவற்றின் இயல்தகவுக்கு ஏற்ப வகைப்படுத்தல். | கொழும்பு, களுத்துறை, கம்பஹா, காலி, மாத்தறை மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 5 பகுதிகள் | 05 | 96.8 |
| மாவட்டத்தில் குறிப்பிட்ட காணிப் பயன்பாட்டுப் பிரச்சனைகளைப் பற்றி விஷேட ஆய்வு மேற்கொள்ளல் | 75 | 72 | 96.92 |
| வளம் குன்றிய விவசாய நிலங்களை அடையாளப்படுத்தல், வகைப்படுத்தல் மற்றும் வரைபடமாக்கல் | 25 | 25 | 98.28 |
| தெரிவு செய்யப்பட்ட மாவட்டங் களில் நிலச்சரிவு ஏற்படக்கூடியதாக அடையாளங்காணப்பட்ட இடங்களுக்கு பொருத்தமான காணிப் பயன்பாட்டுத் தெரிவுகளை பரிந்துரை செய்தல் | 7 மாவட்டங்களில் 10 இடங்கள் | 10 | 94 |
| நிலங்களின் நிலையான பயன்பாட்டிற்காக விழிப்புணர்வு திட்டங்கள், கருத்தரங்குகள்; மற்றும் கலந்துரையாடல்களை நடத்துதல் | 200 | 200 | 100 |
| மாவட்ட, பிரதேச மற்றும் கிராம மட்டத்தில் காணிப்பயன்பாட்டுத் திட்டமிடற் குழுக்கள் | 330 குழுக்கள் | 360 | 100 |

## மாவட்ட மட்டத்தில் செயற்படுத்தப்பட்ட திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்

**வரைபடம்** 5.16.2


%
100
80
60
40
20
0
வளங்குன்றாத காணிப் பயன்பாட்டுக்காக கிராமிய மட்டத்தில் காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல்
பங்குபற்றும் அணுகுமுறை மூலம் சிறுநீரேந்து பிரதேசங்களுக்கு காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல்;
மண் மற்றும் நீர் பாதுகாப்பு மூலம் குறைந்த பாவனையிலுள்ள விவசாய நிலங்களின் உற்பத்தித்திறனை அதிகரித்தல்
தாழ்நில ஈரவலையத்திலுள்ள நெற் செய்கை நிலங்களை அவற்றின் இயல்தகவுக்கு ஏற்ப வகைப்படுத்தல்.
மாவட்டத்தில் குறிப்பிட்ட காணிப் பயன்பாட்டுப் பிரச்சனைகளைப் பற்றி விஷேட ஆய்வு மேற்கொள்ளல்
வளம் குன்றிய விவசாய நிலங்களை அடையாளப்படுத்தல், வகைப்படுத்தல் மற்றும் வரைபடமாக்கல்
தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் நிலச்சரிவு ஏற்படக்கூடியதாக அடையாளங்காணப்பட்ட இடங்களுக்கு பொருத்தமான காணிப் பயன்பாட்டுத் தெரிவுகளை பரிந்துரை செய்தல்
நிலங்களின் நிலையான பயன்பாட்டிற்காக விழிப்புணர்வு திட்டங்கள், கருத்தரங்குகள்; மற்றும் கலந்துரையாடல்களை நடத்துதல்
மாவட்ட, பிரதேச மற்றும் கிராம மட்டத்தில் காணிப்பயன்பாட்டுத் திட்டமிடற் குழுக்கள்
31.12.2818 வரை பௌதிக முன்னேற்றம்